**மண்முனை பிரதேச சபை - 2023**

---

## 1. நிதிக்கூற்றுக்கள்

### 1.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

மண்முனை பிரதேச சபையின் 2023 திசெம்பர் 31 இல் உள்ளவாறான ஐந்தொகை அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான வருமானங்கள் மற்றும் செலவுகள் கணக்கு, காசுப்பாய்ச்சல் கூற்று, முக்கியமான கணக்கீட்டு கொள்கைகள் மற்றும் ஏனைய விளக்கமளித்தல் தகவல்களின் பொழிப்புக்களை உள்ளடக்கிய 2023 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 1987 இன் 15 ஆம் இலக்க பிரதேச சபைச் சட்டத்தின் 172(1) ஆம் உப பிரிவு மற்றும் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்திலுள்ள ஏற்பாடுகளுடன் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையில் உள்ளடக்கப்பட்ட ஏற்பாடுகளின் பிரகாரம் எமது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. பாராளுமன்றத்திற்குச் சமர்ப்பிக்கப்பட வேண்டுமென நான் கருதும் எனது கருத்துரைகளும் அவதானிப்புக்களும் இந்த அறிக்கையில் தரப்படுகின்றன.

இந்த அறிக்கையின் 1.6 ஆம் பந்தியில் காட்டப்பட்டுள்ள விடயங்களின் தாக்கங்களைத் தவிர்த்து, நிதிக்கூற்றுக்கள் 2023 திசெம்பர் 31 இல் உள்ளவாறான மண்முனை பிரதேச சபையின் நிதி நிலைமை மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதன் நிதிச்செயலாற்றல் மற்றும் காசுப்பாய்ச்சல் கூற்று பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டு நடைமுறைகளுக்கு இணங்க உண்மையாக மற்றும் நியாயமாக வெளிப்படுத்துகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இந்த அறிக்கையின் 1.6 ஆம் பந்தியில் காட்டப்பட்டுள்ள விடயங்களை அடிப்படையாகக் கொண்டு நான் நிதிக்கூற்றுக்கள் தொடர்பில் முனைப்பழியுள்ள அபிப்பிராயம் வெளிப்படுத்துகின்றேன்.

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (இ.க.நி) இணங்க என்னால் கணக்காய்வு செய்யப்பட்டது. இக்கணக்காய்வு நியமங்களின் கீழான எனது பொறுப்பு, இந்த அறிக்கையின் நிதிக்கூற்றுக்களின் கணக்காய்வு சம்பந்தமான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள் என்ற பகுதியில் மேலும் விபரிக்கப்பட்டுள்ளது. எனது முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படையினை வழங்கும் வகையில் என்னால் பெற்றுக்கொள்ளப்பட்ட கணக்காய்வுச் சான்றுகள் போதியளவானவை மற்றும் பொருத்தமானவை என்பது எனது நம்பிக்கையாகும்.

### 1.3 நிதிக்கூற்றுக்கள் சம்பந்தமாக முகாமைத்துவத்தினதும் தொடர்புபட்ட நிருவகிக்கின்ற தரப்பினர்களினதும் பொறுப்புக்கள்

இந்நிதிக்கூற்றுக்களை பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டு தத்துவங்களுக்கு இணங்க தயாரித்தலும் நியாயமாகச் சமர்ப்பித்தலும் மற்றும் மோசடிகள் அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களற்ற நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு இயலுமான வகையில் தேவையான உள்ளகக் கட்டுப்பாட்டினைத் தீர்மானிப்பது முகாமைத்துவத்தின் பொறுப்பாகும்.

பிரதேச சபையின் நிதி அறிக்கையிடல் நடைமுறை சம்பந்தமான பொறுப்பு, நிருவகிக்கின்ற தரப்பினர்களால் ஏற்றுக் கொள்ளப்படும்.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 16(1) ஆம் உப பிரிவின் பிரகாரம் பிரதேச சபையின் வருடாந்த மற்றும் காலரீதியான நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு முடியுமான வகையில் சொந்த வருமானங்கள், செலவுகள் சொத்துக்கள், பொறுப்புக்கள் என்பன தொடர்பாக முறையான ஏடுகள் மற்றும் அறிக்கைகள் பேணப்படுதல் வேண்டும்.

## 1.4 கணக்காய்வின் நோக்கெல்லை (நிதிக்கூற்றுக்களின் கணக்காய்வு சம்பந்தமாக கணக்காய்வாளரின் பொறுப்பு)

---

ஒட்டுமொத்தமாக நிதிக்கூற்றுக்கள் மோசடி மற்றும் தவறுகளின் காரணமாக ஏற்படுகின்ற பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்டதாக நியாயமான உறுதிப்படுத்தலொன்றைப் பெற்றுக்கொள்வது மற்றும் எனது அபிப்பிராயம் உள்ளடக்கப்பட்ட கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை வழங்குவது எனது நோக்கமாகும். நியாயமான உறுதிப்படுத்தல் உயர் மட்டத்திலான உறுதிப்படுத்தலொன்றாக இருந்த போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வினை மேற்கொள்ளும் போது அது எப்போதும் பொருண்மையான தவறான கூற்றுக்கள் அற்றவை என்பதற்கான உறுதிப்படுத்தலொன்றல்ல. மோசடி அல்லது தவறுகள் தனியாகவோ அல்லது கூட்டாகவோ தாக்கமளிப்பதால் பொருண்மையான தவறான கூற்றுக்கள் இருக்க கூடியதாக இருப்பதுடன் அதன் பொருண்மையான தன்மையானது இந்நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பயன்படுத்துவோரால் அமுல்படுத்தப்படுகின்ற பொருளாதாரத் தீர்மானம் தொடர்பான ஏற்படுத்துகின்ற தாக்கத்தின் அடிப்படையில் தங்கியுள்ளது.

இலங்கை கணக்காய்வு நியமத்தின் பிரகாரம் கணக்காய்வின் ஒரு பகுதியாக என்னால் கணக்காய்வின் போது தொழில்சார் வெளிப்படைத்தன்மை மற்றும் தொழில்சார் ஐயப்பாடுகளுடன் நடவடிக்கை எடுக்கப்பட்டது. என்னால் மேலும்,

- வெளிப்படுத்தப்பட்ட கணக்காய்வு அபிப்பிராயத்திற்கான அடிப்படையினை வழங்கும் போது மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களில் ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களினால் ஏற்படும் ஆபத்துக்களை இனங்காண்பற்கும் மதிப்பீடு செய்வதற்குமாக சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகள் திட்டமிடப்பட்டு அமுல்படுத்தப்பட்டன. பிழையாகக் காட்டுவதன் காரணமாக ஏற்படுகின்ற பொருண்மையான பிறழ்கூற்றுக்களிலிருந்து இடம்பெறுகின்ற தாக்கங்களை விட மோசடிகளால் இடம்பெறுகின்ற தாக்கங்கள் பாரியதாக இருப்பதானது தவறான கூட்டிணைவால், போலி ஆவணங்களைத் தயாரிப்பதனால், வேண்டுமென்றே விட்டுவிடுவதனால், பிழையாகக் காட்டுவதனால் அல்லது உள்ளகக் கட்டுப்பாடுகளைத் தவிர்ப்பதனால் ஆகிய காரணங்களினால் ஏற்படுவதினாலாகும்.

- உள்ளகக் கட்டுப்பாடுகளின் செயற்திறன் மீது அபிப்பிராயம் தெரிவிக்கும் நோக்கமல்லாதிருந்தும் சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளைத் திட்டமிடும் வகையில் உள்ளகக் கட்டுப்பாடுக்ள மீதான அறிவு பெற்றுக் கொள்ளப்பட்டது.
- பயன்படுத்தப்படுகின்ற கணக்கீட்டு கொள்கைகளின் பொருத்தத் தன்மை, கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத்தன்மை, முகாமைத்துவத்தால் மேற்கொள்ளப்பட்ட நடவடிக்கைகளின் வெளிப்படுத்தல்கள் என்பன மதிப்பீடு செய்யப்பட்டன.

- நிதிக்கூற்றுக்களின் கட்டமைப்பு மற்றும் உள்ளடங்கங்களுக்கா அடிப்படையாகக் கொள்ளப்பட்ட கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் சம்பவங்கள் பொருத்தமாகவும் நியாயமாகவும் உள்ளடக்கப்பட்டுள்ளன எனவும் வெளிப்படுத்தல்கள் உள்ளடக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தல் மதிப்பீடு செய்யப்பட்டது.

  இயலுமான வகையிலும் தேவையான எந்தவொரு சந்தர்ப்பத்திலும் பின்வருவனவற்றை பரீட்சிப்பதற்காக கணக்காய்வு நோக்கெல்லை விரிவுபடுத்தப்பட்டுள்ளது.

- தகவல்களைச் சமர்ப்பித்தல் தொடர்பாக பார்க்கும் போது பிரதேச சபையின் செயற்பாடுகள் தொடர்ச்சியாக மதிப்பீடு செய்யப்படக்கூடிய வகையில் அதன் ஒழுங்கமைப்பு, முறைமைகள், நடைமுறைகள், பதிவேடுகள், அறிக்கைகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் முறையாகவும் போதியளவிலும் திட்டமிடப்பட்டுள்ளதா எனவும் அதன் முறைமைகள் நடைமுறைகள், பதிவேடுகள், அறிக்கைகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் ஆக்கபூர்வமாகவும் பேணிச் செல்லப்படுகின்றதா எனவும்,

- உரிய எழுத்துமூல சட்டத்திற்கோ அல்லது பிரதேச சபையின் வழங்கப்பட்ட ஏனைய பொது அல்லது விசேட ஏற்பாடுகளுக்கு இணங்க பிரதேச சபையின் நிறுவனம் செயற்படுகின்றதா எனவும்,
- தனது அதிகாரங்கள், கடமைகள், மற்றும் பணிகளுக்கு இணங்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதா எனவும்,
- வளங்கள் சிக்கனமாகவும், செயற்திறனாகவும் ஆக்கபூர்வமாகவும் கால எல்லைக்குள் மற்றும் உரிய சட்ட விதிகளுக்கு இணங்க கொள்வனவு செய்யப்பட்டு பயன்படுத்தப்பட்டுள்ளதா எனவும் ஆகும்.

## 1.5 ஏனைய சட்டரீதியான தேவைப்பாடுகள் தொடர்பான அறிக்கை

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தில் பின்வரும் தேவைப்பாடுகள் தொடர்பான விசேட ஏற்பாடுகள் உள்ளடக்கப்பட்டுள்ளன.

(அ) 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு சட்டத்தின் 6(1) (ஈ) (iii) பிரிவில் குறிப்பிடப்பட்ட தேவைப்பாடுகளின் பிரகாரம் பிரதேச சபையின் நிதிக்கூற்றுக்கள் கடந்த வருடத்தை ஒத்திருந்தன.

(ஆ) 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு சட்டத்தின் 6(i)(ஈ)(iv) பிரிவில் குறிப்பிடப்பட்டுள்ள தேவைப்பாடுகளின் பிராகரம் கடந்த வருடத்தில் என்னால் மேற்கொள்ளப்பட்ட பரிந்துரைகள் முன்வைக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டுள்ளது.

## 1.6 நிதிக்கூற்றுக்களை தயாரிப்பது சம்பந்தமான கணக்காய்வு அவதானிப்புக்கள்

### 1.6.1 கணக்கீட்டுக் குறைபாடுகள்

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | சபையின் கருத்துரைகள் | சிபார்சுகள் |
|---|---|---|---|
| (அ) | மீளாய்வாண்டில் விற்பனை செய்யப்பட்ட 14 வகையான 69 சொத்துக்களின் பெறுமதிகளினை அச் சொத்துக்களின் கிரயப் பெறுமதிகளிலிருந்து கழித்து காட்டப்பட்டிருக்கவில்லை. | அடுத்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்களில் இப்பெறுமதியானது குறைத்துக் காட்டப்படும். | அகற்றப்பட்ட சொத்துக்களின் பெறுமதி கணக்குகளிலிருந்து கழித்துக் காட்டுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |
| (ஆ) | மீளாய்வாண்டில் சபையின் 06 நூலகங்களுக்கு நன்கொடையாக கிடைக்கப்பெற்ற ரூபா 288,726 பெறுமதியான 499 புத்தகங்கள் மற்றும் பெறுமதி கணிப்பிடப்படாத 127 புத்தகங்களின் பெறுமதிகளினை நிதிக்கூற்றுக்களில் காட்டப்பட்டிருக்கவில்லை. | எதிர்வரும் ஆண்டில் கணக்குகளில் காட்டுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | நன்கொடைப் புத்தகங்களை நிதிக்கூற்றுக் களில் காட்டுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |
| (இ) | மீளாய்வாண்டின் இறுதியில் உள்ளவாறு நுகர்வுப்பொருள் இருப்பு ரூபா 203,225 மற்றும் எழுதுகருவி இருப்பு ரூபா 135,343 என்பவைகள் நிதிக்கூற்றுக்களில் காட்டப்பட்டிருக்கவில்லை. | எதிர்வரும் காலங்களில் இருப்புக்களின் பெறுமதி கணக்குகளில் சேர்த்துக்கொள்ளப்படும். | இருப்புக்களை நிதிக்கூற்றுக் களில் சொத்தாகக் காட்டுவதற்கு நடவடிக்கை |

| | | | |
|---|---|---|---|
| | | | எடுக்கப்பட வேண்டும். |
| (ஈ) | சபையின் திண்மக்கழிவகற்றல் நிலையத்தினால் உற்பத்தி செய்யப்பட்டு விற்பனைக்கு தயாராக இருந்த ரூபா 187,500 பெறுமதியான 15,000 கிலோகிராம் இயற்கை உரங்களின் பெறுமதிகள் நிதிக்கூற்றுக்களில் காட்டப்பட்டிருக்கவில்லை. | எதிர்வரும் காலங்களில் இதனை கணக்குகளில் சேர்த்துக்கொள்வதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்படும். | இயற்கை உர இறுதி இருப்புக்களை சொத்தாக கணக்குகளில் காட்டுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

### 1.6.2 கணக்காய்விற்காக எழுத்துமூலச் சான்றுகள் இல்லாமை

| கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | சிபார்சு |
|---|---|---|
| மீளாய்வாண்டின் திசெம்பர் 31 இல் உள்ளவாறு நிதிக்கூற்றுக்களில் காட்டப்பட்டுள்ள ரூபா 69,642,923 பெறுமதியான 04 மீதிகளுடன் தொடர்புடைய நிலையான சொத்துப் பதிவேடு, உரிமையை உறுதிப்படுத்தும் பதிவேடுகள், முற்பணப் பதிவேடு மற்றும் ஏனைய பதிவேடுகள் கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை. | காணி கட்டடங்கள் பொறி, மோட்டர் வாகனங்கள், தளபாடங்கள் போன்ற நிலையான சொத்துக்களின் பெறுமதியை மதிப்பிடுவதற்கும் வாகனங்கள் உரிமையை மாற்றம் செய்வதற்கும் நடவடிக்கை எடுக்கப்படவுள்ளது. | சொத்துக்களுக்கான எழுத்து மூலச் சான்றுகளை பெற்றுக் கொள்ளவும் பதிவேடுகளில் பதிவு செய்யவும் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

### 1.7 இணக்கமின்மைகள்

### 1.7.1 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள், முகாமைத்துவத் தீர்மானங்கள் என்பவற்றுடனான இணக்கமின்மைகள்

சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள், முகாமைத்துவ தீர்மானங்கள் என்பவற்றுடனான இணக்கமின்மைச் சந்தர்ப்பங்கள் கீழே தரப்படுகின்றன.

| | சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள், முகாமைத்துவத் தீர்மானங்கள் என்பவற்றுக்கான தொடர்பு | பெறுமதி (ரூபா) | இணக்கமின்மை | சபையின் கருத்துரை | சிபார்சுகள் |
|---|---|---|---|---|---|
| (அ) | இலங்கை சனநாயக சோசலிச குடியரசின் அதிவிஷேச 2021 ஒக்தோபர் 12 ஆந் திகதிய வர்த்தமானப் பத்திரிகை இல. 2249/13 ஒழுங்குவிதி இல. 6(2) | --- | சபையில் பதிலீட்டு அடிப்படையில் பணிபுரிகின்ற 13 எண்ணிக்கையான சுகாதாரத் தொழிலாளர்களுக்கு ஊழியர் சேமலாப நிதிய உறுப்பாண்மைச் சான்றிதழ் படிவம் ‘‘பீ’’ இனை பெற்றுக்கொள்வதற்கான நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை | சபையின் பதிலீட்டு அடிப்படையில் பணிபுரிகின்ற 13 பேருக்கும் ‘‘பீ’’ சான்றிதழ் படிவம் பெற்றுக் கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | சுற்றறிக்கையின் பிரகாரம், தொழிலாளர்களுக்கு ஊழியர் சேமலாப நிதிய உறுப்பாண்மைச் சான்றிதழ் பெறப்பட நடவடிக்கை எடுக்கப்பட |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| | | | . | | வேண்டும். |
| (ஆ) | 2018 யூலை 26 ஆந் திகதியும் 03/2018 ஆம் இலக்கமும் கொண்ட திறைசேரி செயற்பாடுகள் சுற்றறிக்கை | 691,769 | கடந்த 08 வருடங்களாக தொழிற்படாமல் காணப்படும் இலங்கை வங்கி நடைமுறைக் கணக்கினை மூடிவிடுவதற்கான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருக்கவில்லை. | திண்மக் கழிவிற்காக ஆரம்பிக்கப்பட்ட உத்தியோகபூர்வ கணக்கு இவ்வருடம் மூடப்படும். | சுற்றறிக்கையின் பிரகாரம், தொழிற்படாத வங்கிக் கணக்குகளை மூடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |
| (இ) | 2018 ஒக்தோபர் 10 ஆந் திகதியும் 03/2018 ஆம் ஆதன முகாமைத்துவ சுற்றறிக்கை | --- | சபையின் பாவனையிலுள்ள 5 டொன் எடையுள்ள வீதி உருளையின் உரிமையாளரை அறியமுடியாத சந்தர்ப்பத்தில் வாகனத்தின் பதிவினை மோட்டார் வாகன ஆணையாளர் நாயகத்திடமிருந்து பெற்றுக்கொள்வதற்கான நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | இயந்திரத்தின் பதிவினை மோட்டார் போக்குவரத்து திணைக்களத்திடமிருந்து பெற்றுக் கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | வாகனத்தின் உரிமையினை மாற்றிக் கொள்ள நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

## 2. நிதி மீளாய்வு

### 2.1 நிதி விளைவுகள்

சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் பிரகாரம், 2023 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான சபையின் மீண்டுவரும் செலவுகளை மிகைத்த வருமானம் ரூபா 10,155,483 ஆக இருந்ததுடன், அதற்கு நேரொத்த முன்னைய ஆண்டின் மீண்டுவரும் செலவுகளை மிகைத்த வருமானம் ரூபா 18,381,968 ஆகும்.

### 2.2 வருமான நிருவாகம்

#### 2.2.1 மதிப்பீடு செய்யப்பட்ட வருமானம், பட்டியலிடப்பட்ட வருமானம், சேகரிக்கப்பட்ட வருமானம் மற்றும் நிலுவை வருமானம் என்பன

மீளாய்வாண்டு மற்றும் முன்னைய ஆண்டு தொடர்பாகச் சமர்ப்பிக்கப்பட்ட மதிப்பீடு செய்யப்பட்ட வருமானம், பட்டியலிடப்பட்ட வருமானம், சேகரிக்கப்பட்ட வருமானம், நிலுவை வருமானம் என்பன தொடர்பான தகவல்கள் கீழே தரப்படுகின்றன.

| வருமான மூலம் | 2023 மதிப்பீடு செய்யப்பட்ட வருமானம் | பட்டியலிடப் பட்ட வருமானம் | சேகரிக்கப் பட்ட வருமானம் | திசெம்பர் 31 இல் உள்ளவாறான மொத்த நிலுவை | 2022 மதிப்பீடு செய்யப்பட்ட வருமானம் | பட்டியலிடப் பட்ட வருமானம் | சேகரிக்கப் பட்ட வருமானம் | திசெம்பர் 31 இல் உள்ளவாறான மொத்த நிலுவை |
|---|---|---|---|---|---|---|---|---|
| | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| வீதவரியும் வரியும் | 4,600,000 | 4,932,591 | 3,945,100 | 987,497 | 2,210,000 | 3.242.960 | 3,280,635 | 525,197 |
| வாடகை | 12,150,000 | 12,955,302 | 11,531,555 | 1,423,747 | 9,644,600 | 9,378,800 | 8.083,000 | 1,861,447 |
| உத்தரவுப் பத்திரக் கட்டணம் | 1,770,000 | 2,205,005 | 2,205,005 | - | 1,895,000 | 1,554,690 | 1,554,690 | - |
| ஏனைய வருமானம் | 74,639,433 | 56,185,404 | 52,889,229 | 3,296,175 | 28.020,000 | 48,057,170 | 48,355,585 | 3.430,939 |
| | 93,159,433 | 76,278,302 | 70,570,889 | 5,707,419 | 41,769,600 | 62,233,620 | 61,273,910 | 5,817,583 |

### 2.2.2 வருமானங்களை சேகரிக்கும் செயலாற்றல்

சபையின் அனைத்து வருமானங்களையும் சேகரிக்கும் செயலாற்றல் தொடர்பான அவதானிப்புக்கள் கீழே தரப்படுகின்றன.

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | சபையின் கருத்துரைகள் | சிபார்சுகள் |
|---|---|---|---|
| **(அ)** | சபையின் நிர்வாக எல்லைக்குள் அமைந்துள்ள கட்டிடங்களுக்கு அறவிடப்பட வேண்டிய வீதவரி ரூபா 722,939 தொகையினை அறவிடுவதற்கான நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | இத்தொகையினை அறவீடு செய்வதற்கு நடவடிக்கைககள் எடுக்கப்படுகின்றது. | வீதவரி நிலுவைகளை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |
| **(ஆ)** | மீளாய்வாண்டின் இறுதியில் 34 வாடகை தாரர்களிடமிருந்து அறவிட வேண்டிய வாடகை வருமானம் மற்றும் குத்தகை வருமானம் என்பன முறையே ரூபா 371,797 மற்றும் ரூபா 865,250 அறவிடப்பட்டிருக்கவில்லை. | நிலுவைகளை அறவிட நடவடிக்கை எடுக்கப்படும். | அறவிட வேண்டிய வாடகை மற்றும் குத்தகை வருமானங்களை அறவிட நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

## 3. செயற்பாட்டு மீளாய்வு

### 3.1 சொத்துக்கள் முகாமைத்துவம்

| கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | சிபார்சு |
|---|---|---|
| சபையின் நிதியினை பயன்படுத்தி 2018 ஆம் ஆண்டில் ரூபா 314,000 பெறுமதிக்கு கொள்வனவு செய்யப்பட்டு சபையின் முன்னாள் செயலாளர் ஒருவரின் பெயரில் பதிவு செய்யப்பட்ட இழுவைப் பெட்டி மற்றும் வேறு அமைச்சு, திணைக்களங்களின் | வாகனங்களை சபையின் பெயருக்கு உரிமை மாற்றம் செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | வாகனங்களின் உரிமையினை சபையின் பெயருக்கு மாற்றுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

பெயரிலுள்ள 12 வாகனங்களின் உரிமையினையும் மாற்றுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

### 3.2 மனித வளங்கள் முகாமைத்துவம்

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | சபையின் கருத்துரைகள் | சிபார்சுகள் |
|---|---|---|---|
| (அ) | முகாமைத்துவ சேவைகள் திணைக்களத்தினால் அனுமதிக்கப்பட்ட ஆளணி பட்டியல்களுக்கமைய, சபையில் காணப்படுகின்ற 15 வெற்றிடங்களை நிரப்புவதற்கான நடவடிக்கை சபையினால் எடுக்கப்பட்டிருக்கவில்லை. | மாதாந்தம் ஆளணி விபரம் பிராந்திய பற்றிய அறிக்கையானது உள்ளூராட்சி அலுவலகம் மற்றும் உதவி உள்ளூராட்சி அலுவலகம் என்பவற்றிற்கு அனுப்பப்படுகின்றது. | ஊழியர் வெற்றிடங்களை நிரப்புவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |
| (ஆ) | சபையினால் நடாத்தப்படும் கணிணி பயிற்சி நிலையத்தில் 2016 முதல் மீளாய்வாண்டு இறுதி வரையிலும் 2,710 மாணவர்கள் கணிணி பயிற்சி நெறிக்காக இணைக்கப்பட்டிருந்துடன் இப்பயிற்சி நெறி மூலம் ரூபா 9,123,840 வருமானம் சபைக்கு கிடைக்கப்பெற்றிருந்த போதிலும், 2016 ஆம் ஆண்டு தொடக்கம் தற்காலிகமாக இணைக்கப்பட்ட தகவல் தொடர்பாடல் தொழில்நுட்ப பயிற்றுவிப்பாளருக்கான நிரந்தரப் பதவிநிலையொன்றை சபையினால் உருவாக்கி அங்கீகாரம் பெறுவதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை. | தகவல் தொடர்பாடல் தொழில்நுட்ப பயிற்றுவிப்பாளருக்கான ஆளணியானது எமது நியாயப்படுத்தலுடன் ஆளணி உருவாக்கத்திற்காக சமர்ப்பிக்கப்பட்டுள்ளது. | பயிற்றுவிப்பாள ருக்கான நிரந்தரப் பதவிநிலையொன்று உருவாக்கப்பட்டு அங்கீகாரம் பெறுவதற்கான நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |
| (இ) | ஓய்வு பெற்றுச் சென்ற இரு சுத்திகரிப்பு தொழிலாளிகளிடமிருந்தும் மற்றும் மரணித்த உத்தியோகத்தர் ஒருவரிடமிருந்தும் அறவிடவேண்டிய ரூபா 258,343 தொகையான கடன் நிலுவையினை 02 வருட காலத்திற்கு மேலாக அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | இருவரின் கடன் நிலுவையினை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. | ஊழியர் கடன் நிலுவைகளை அறவிட நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

## 4. கணக்களிப்பொறுப்பும் நல்லாட்சியும்

### 4.1 வருடாந்த செயல்நடவடிக்கைத் திட்டம்

| கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | சிபார்சு |
|---|---|---|
| வருடாந்த பாதீட்டின் பிரகாரம், சபையினால் நிறைவேற்ற வேண்டியிருந்த 30 நடவடிக்கைகளுக்காக வருடாந்த செயல்நடவடிக்கைத் திட்டம் தயாரிக்கப்பட்டிருக்கவில்லை. | தங்களது ஆலோசனைகளுக்கமைய எதிர்காலத்தில் வருடாந்த செயல் நடவடிக்கை திட்டம் தயாரிக்கப்படும். | வருடாந்த செயல்நடவடிக்கைத் திட்டம் தயாரிக்க நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |